


ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் மண் உள்வாங்கிய சம்பவம்:

# மனிதச்செயல் – பருவநிலையே காரணம்

கோலாலம்பூர், செப். 8-

தலைநகர் ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் கடந்த வாரம் 8 மீட்டர் ஆழத்தில் மண் உள்வாங்கிய சம்பவத்திற்கு மனிதச்செயல், பருவநிலை, பூமிக்கு அடியில் மண் அரிப்பு ஏற்பட்டதே முக்கியக் காரணம் எனத் தெரிய வந்துள்ளதாக இயற்கை வளம் - இயற்கை நிலைத்தன்மைத்துறை கூறியது.

பக்கம் 13

டும்பச்

இடது
களில்

க்கம் 7)

முதல் பக்கத் தொடர்ச்சி

## ஜாலான் மஸ்ஜிட் ...

ராடார் கருவி மூலம் மலேசியப் புவியியல் நிலவள இலாகா மேற்கொண்ட ஆய்வின்போது இது தெரிய வந்ததாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் அது கூறியது.

மண் உள்வாங்கிய இடத்தில் புவியியல் நிலவள இலாகா மேற்கொண்ட விசாரணை தொடர்பாக ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பணிக்குழு விரைவில் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் மூலம் தொழில்நுட்ப அறிக்கையை வெளியிடும். இந்த அறிக்கை வரும் 3 மாதங்களில் வெளியிடப்படும் என அது கூறியது.

அதேவேளையில் கோலாலம்பூரில் உள்ள அப்பகுதி மிகவும் பாதுகாப்பானது எனவும் அந்த அறிக்கையில் அது கூறியது. இந்த ஆய்வின் மூலம் அப்பகுதியில் மேலும் இதுபோன்ற மண் உள்வாங்கும் சம்பவம் நிகழாமல் இருப்பதைத் தவிர்க்க முடியும் என்பதோடு அதற்கேற்ப அப்பகுதியைப் பராமரிப்பது உட்பட கண்காணிப்பு நடவடிக்கையிலும் தீவிரம் காட்ட முடியும் என அது கூறியது.

மலேசியப் புவியியல் நிலவள இலாகா கிள்ளான் பள்ளத்தாக்கில் உள்ள 10 ஊராட்சி மன்றங்களின் ஆதரவோடு இது தொடர்பான கூடுதல் விவரங்களைச் சேகரிப்பதற்கு கோலாலம்பூர் புவியியல் ஆய்வுத் திட்டத்தை மேற்கொள்ளும் எனவும் அது கூறியது.

கோலாலம்பூரின் பாதுகாப்பு குறித்து பொறுப்பற்ற சில தரப்பினர் வெளியிட்டு வரும் ஆரூடங்களைப் பொதுமக்கள் ஒருபோதும் நம்ப வேண்டாம் எனவும் அது தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டது.

மண் உள்வாங்கும் சம்பவம் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கைக்கும் புவியியல் நிலவளத் தரப்பின் முழுமையான தகவல்களைப் பெறுவது அவசியமாகும் எனவும் அது கூறியது.

கடந்த ஆகஸ்டு 23ஆம் தேதி ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நிகழ்ந்த மண் உள்வாங்கும் சம்பவத்தில் இந்தியாவைச் சேர்ந்த விஜயலெட்சுமி (வயது 48) 8 மீட்டர் ஆழத்தில் விழுந்தார்.

9 நாட்களாக அவரைத் தேடும் பணிகள் தொடரப்பட்டு வந்த வேளையில் அது நிறுத்தப்படுவதாகக் கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா கடந்த 31.8.2024ஆம் தேதி அறிவித்திருந்தார்.